# ஸ்ரீ எதிராசர் எழிற் காவியம்

(இயற்றியது – ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிந்தகிருஷ்ணன் அழகர்)

**வந்தனைகள்**

1. சிரீமுஷ்ணம் ஆண்டவன் சீரடி போற்றி,
சீலமிகு குடைந்தையாண்டவன் கோதிலாத் தாள் பணிந்து,
துவராடை எதிராசர் தூய நல்லெழிற் காவியம்,
தூமறைச் சாறெனத் துதித்துப் பணிவனே.

2. திருநின்ற ஆசான்கள் திருவடிகள் தொழுது,
தேசுயர் ஞான தேசிகன் தெள்ளருள் வேண்டி,
பெரும்பூதூர் வள்ளல் தம் பெறற்கரு வைபவம்,
பிழையின்றி இசைத்துப் பேரின்பம் பெருவனே.

3. மலையப்பன் திருமணியாய் மண்ணுலகுதித்து,
மருவலர் சமயங்கள் மாய்ந்திட வாது செய்து,
விலையில் வைணவம் வேதநெறியாய் நாட்டிய,
வேதாந்தவாசிரியன் தாள் வீழ்ந்து பணிவனே.

4. மறை முற்றும் தமிழ் செய்த மாறன் தன்,
குறையகற்றும் கழல்களில் கூர்மதியால் பணிந்து,
வரையற்ற வள்ளல் வாசுதேவனே பரமென்று,
உரைமுற்றும் செய்த உடையவரடிகள் பணிவனே.

5. பக்தியில்லாப் பழவினைப் பாவியேனானின்று,
பழவினை வேரறுத்துப் பரமனை ஏத்த,
பாமன்னுமாறன் பாதம் படியச் செய்த,
பைந்துவராடை எதிராசர் பாதம் பணிவனே.

6. நீசக் கலி கெடுத்து, நிமலனை ஏத்தா நின்ற,,
தீசச் சமயங்களைத் தீயிட்ட தூசாக்கி,
பாசப் பெருங்கடலுழலும் பாரோர் உய்ய,
பாடியம் வகை செய்தான் பாதம் பணிவனே.

7. அழகர் மலை யழகனுக்கு அழகு தடா நூறில்,
அமுதொடு வெண்ணெய் ஆர்வமுடன் படைத்து,
ஆலிலை சாயிக்கு அனுதினம் சூடித் தரும்,
ஆண்டாளின் அண்ணனார் அடிகள் பணிவனே.

8. ஆழ்வார்களாம் மேகங்கள் ஆரப் பொழிய,
அருள் வரை நாதமுனியால் 'ஆளவந்த' பொய்கை நிறைய,
ஐம் பெரும் ஆசான்கள் ஆறாய்ப் பெருகி,
ஆட்கொண்ட ராமானுசன் அடிகள் பணிவனே.

9. நிலமகட்க்குப் பாரமாய நெறியிழந்தார் நலிய,
நிலமிசைப் பரசமயங்கள் நிலையற்று மலிய,
நிமலனே பரம் என நிலைநாட்டிய முனியை,
நிலமிசை புரண்டு நித்தம் யான் பணிவனே.

10. நடந்தால் நாரணர்க்கு நல்லதோர் சோடாய்,
நலுங்காமலமர நல்லரியாசனமாய்,
கிடந்தால் அணையாய் வெண்கொற்றக் குடையாய்,
கீர்தியன் எதிராசன் எழிற்கழல் பணிவனே.

11. இரு பதம் செங்கமலத்தே இருத்தி,
இருகரம் குவித்துக் குவளையாய்,
ஏழில் வதனத்தே இன்முறுவல் காட்டி,
என்புருக்கும் அன்பு இதுவன்றோ வென,
பிரியா முக்கோலுடன் பெருமந்தூர் வள்ளல்,
பித்தனாக்கினாரெனைப் பேதை நெஞ்சமே.

12. சொல்லின் வாயமுதம் அவன் திருநாமம்,
சொக்க வைக்கும் மனதையவன் சுந்தர ரூபம்,
பேராயிரத்தானடிகளே அவன் பிரைநுதல் புண்டரம்,
பித்தனானேன்றோ ராமானுசன் பேரின்ப வழகிலே.

13. எமக்குவுற்ற செல்வம் எங்கள் எதிராசன்,
தமக்கு வுற்ற செல்வமென்று தன்னரும் தமர்களை,
கலக்கமற்ற மனத்தராக்கிக் கமலநாபன் தாளிடை,
காலமெல்லாம் வைத்திடும் வாதாசனரடிகள் பணிவனே.

14. நலமந்தமில் ஆண்டவன் நல்லுரு மனத்துள்,
நற்றுவராடை எதிராசர் நம் மகத்துள்,
நாவினில் நடமிடும் நாரணர் மூல மந்திரம்,
நா னென்று மணியும் நலந்தரு தாயத்துக்களே.

**ஸ்ரீ ஆளவந்தார்**

15. நாதமுடன் நாலாயிரம் தந்த நாதமுனி பவுத்திரனாய்,
நல்லாடியில் நானிலத்தே உத்திராடத்தில்,
நாரணரின் நல்லரியாசனமே வீர நாராயணபுரத்தே,
நானிலத்துதித்தார் நல்லாசன் யமுனாசாரியராய்.

16. வீண்வாதம் செய்து நல்லோரை வீழ்த்தி,
வெற்றி மயக்க மாழ்ந்தான் வித்வத் கோலாகலன்,
செம்மறி ஆட்டைச் சிறு சிங்கம் சிதைத்தாற் போல்,
சிறுவன் யாமுனன் செற்றாரவன் செருக்கை.

17. ''ஒரே மகவைப் பெற்ற உன் தாய் மலடி,
உயர் அரசனும் பாபியே ஊரார் மறத்தால்,
நவ தேவதையுரையும் நாதனின் அரசியும்,
நானுரைப்பேன் பத்தினியல்ல நல்லறப்படி,
உயர்ந்த நல் மனுவாக்கை உணரா மூடா,
உடன் விடுப்பாய் செருக் கென'' உரைத்தார் யாமுனர்.

18. அதிமேதாவியை ஆளவந்தச் சிறுவன்,
'ஆளவந்தாரே' என அரசியும் உகக்க,
அந்நாட்டுப் பகுதியொன்றை ஆளும் உரிமை,
ஆங்கு பெற்றுயர்ந்தார் ஆளவந்தாராய்.

19. ''யமுனைக் கண்ணனின் நினைவிழந்தான்,
என்னரும் பவுத்திரன் இணையில் நன்மகன்,
மணக்கால் முனியே மாதவனிடம் ஈர்த்திடுவீர்'' என,
மனங்கவர் திருநாடடைந்தார் மன்னுபுகழ் நாதமுனி.

20. தூயவரும் ஆளவந்தாரைத் தூதுவளையால் மயக்கி,
'தொல்லரும் குலதனம் தூரத்தேயுள்ள' தென,
அந்தமில் அழகன் அரங்கனடி சேர்க்க,
ஆளவந்தாரைத் தனியே அழைத்தேகினார்.

21. ‘‘ஆறிரண்டினூடே அழகுமதிள் ஏழுள்,
ஆயிரம் வாய் அரவு அனுதினம் காக்க,
ஆண்டு பன்னிரண்டு தோறும் அரக்கன் தொழ,
அழியா உன் குலதனம் ஆங்குள‘‘ தென்றார்.

22. நம்பிகளை நம்பி நாட்டினை விடுத்து,
நச்சரவம் சூழ் நற்தனம் காண,
அரங்கன்கோயில் அணுகிய ஆளவந்தார்,
அழகனில் ஆழ்ந்து அணைத்தாருடன் துறவு.

**ஸ்ரீ ராமானுஜர் அவதாரம்**

23. பொய்கையார் உதித்த கச்சிக்கும் புனித அழிசைக்கும்,
மையமாய் நின்றது மதிள்சூழ் பெருமந்தூர்,
ஆராவெழில் ஆதிகேசவனை ஆங்கு,
ஆசூரி கேசவர் அநுதினம் ஏத்தி வந்தார்.

24. சிரீசைல பூரணர் ஆளவந்தாரின் சீரிய சீடர்,
சீலமிகு காந்திமதியின் சிறப்புற்ற தமயன்,
அயராது வேள்விகள் ஆற்றும் ஆசூரி கேசவர்க்கு,
அவ்வணங்கை மணமுடித்து மட்டிலா மகிழ்வுற்றார்.

25. இல்லறமாம் நல்லறம் இனிதே செல்ல,
இன்னமுத மகனுக்கு ஏங்கலுற்றார் ஆசூரி,
வேதனையில் உழன்ற அவ் வேத விற்பன்னர்,
வேள்வியால் துதித்தார் அல்லிக்கேணி அமுதனை.

26. வேள்வியில் மகிழ்ந்த வேங்கட கிருஷ்ணன்,
வேதியரவர் கனவில் விரைந்து நின்றான்,
மலிவதற் கெண்ணும் கலிதனைக் கெடுக்க,
மகனாய் யவர்க்குதிக்க மங்கலம் இயம்பினான்.

27. ஆண்டொன்று இனிதே யகல,
ஆண்டு பிங்களையில் ஆதிரைத் தாரகையில்,
சீர் பெற்ற சித்திரையில் சிறந்த குருவாரத்தே,
செல்வ மகனலர்ந்தான் செகமுற்றும் வாழவே.

28. காந்திமதி செல்வனின்காந்தி கண்டு,
கண்பெற்ற பேறு பெற்றேனெனக் களித்து,
காகுத்தன் இளவலே கருணையால் வந்தானென,
கருத்தாய் மாமனிட்டார் ‘இராமானுச’ னெனும் நாமம்.

29. *அமுதனார் பின் பகர்வார் ஆழியான் ஆழியோடு,*
*ஆர்கடல் எரித்த அழகு கோண்டமும்,*
*எழிலார் சங்கும் இணையில் நாந்தக வாளும்,*
*இராமானுச முனியாய் இருந்ததாம் இந்நிலத்தே.*

**திருக்கச்சி நம்பிகள்**

30. கச்சிநகர் வரதனைக் கண்ணார ஏத்த,
உச்ச வெய்யில் பாராது ஒரு நாளும் ஓயாது,
பூவிருந்த வல்லி விட்டு பொன்னகர் காஞ்சிக்கு,
போய்வருவார் கால்நடையாய் காஞ்சீபூரணர்.

31. அத்திகிரி அருளாளன் அழகிலாழ்ந்த இவர்,
ஆலவட்டம் அவனுக்கு நிதமும் வீசுவார்,
மூலவனோடு வார்த்தையாடும் மூன்றாம் வருணரிவர்,
முனிவரோடொப்பர் என்பர் முதல் வருணத்தார்.

32. ஈரூருக்கும் இடையில் இருபதாம் கல்லில்,
எழில் பொழில் சூழ் பெருமந்தூரில்,
பூரணரும் பொலிந்து நின்ற தேசுடை ராமானுசரும்,
பூரணமாய் ஒன்றி புனிதக் குழாமாயினர்.

### இல்வாழ்க்கை

33. ஆண்டுகள் பத்தொடு ஆறு ஒன்று கழிய,
அத்தனின் உரைப்படி ஏற்றார் இல்லறம்,
அவனியுள் கடமைகள் அத்துடன் முடிந்ததென,
ஆசூரி கேசவர் அடைந்தார் அச்சுதன் தாள்.

34. காலம் செய்த கோலத்தால் காந்திமதி துன்புற,
காஞ்சிக்குக் குடிபெயர்ந்தார் கலைகள் கற்க,
யதிகளுக்கு அரசானாக்க எம்பிரான் திட்டமிட,
யாதவப் பிரகாசன் குழவில் இவரிணைந்தார்.

35. இளையாழ்வார் கூர்மதில் ஈடிலாயின்புற்று,
இணையில் சீடன் இவனென்றான் யாதவன்,
அண்டமும் பகிரண்டமும் ஆழ்மாயையே என,
அத்வைதம் போதித்தான் அனுதினம் அவன்.

36. எண்ணில் அருந்தவ இராமானுசர் ஓர் நாள்,
எண்ணைக் காப்பிட்டார் இருள் மன ஆசானுக்கு,
சாந்தோக்ய உபநிடத்தே சந்தேகம் கொண்டோர் சீடன்,
சாதிக்க வேண்டினான் 'கப்யாஸத்' தின் கருத்தை.

37. வரட்டு ஞானமே கொண்ட வக்கிர குரு,
வாய் கூசும் வக்கிர பொருள் உரைத்தான்,
மாயோனின் மயக்கிடும் மா மதுரக் கண்களை,
மந்தியின் பிருட்டத்தோடு மதியற்று இணைத்தான்.

38. எரியும் தழலே இறங்கியதோ புண்ணிலென,
இராமானுசர் துடித்துத் துன்புற்றார்.
வெந்தழலாய் உள் வெடித்த வெய்ய துயர்,
வென்னீறூற்றாய் வெளி வந்தது கண்களில்.

39. 'உரைப்பாய் ராமானுச உடன் காரணத்தை' யென,
உரைக்கலுற்றார் எந்தை ஒப்பிலா உயர் பொருள்,
செங்கதிரோன் விரிக்கும் சிவந்த தாமரைக் கண்களை,
செங்குரங்கினவயத்தொடு சேர்த்தல் தகா வென்றார்.

40. குருவுக்கு மிஞ்சிய சீடனிவன்,
கொல்வதே தனக்குச் சாலப் பயன்.
கண்காணா தூரமாம் காசி சென்று,
கங்கையில் கொல்வதெனக் கணக்கிட்டான் யாதவன்.

### கங்கைப் பயணம்

41. சீடர்களைக் கூட்டிச் செப்பினான் சீலமில் குரு,
'செல்வோம் காசிக்குச் செஞ்சடையானை வணங்க',
'தீர்த்திடுவோம் கங்கையில் தீராவினைகள்' என்றவன்,
தேன் மொழியால் மயக்கினான் மாணாக்கரை.

42. சித்தியின் செல்வன் சேவையில் உயர் கோவிந்தன்,
சீர்மேவு ராமானுசன் சேவடி தொடர்ந்தார்,
புனித யாத்திரையில் தன் புல்லிய குரு,
புனிதனுயிர் போக்கிடுவா ரெனக் கண்டறிந்தார்.

43. விந்திய மலைச் சாரல் ஓர் விரிந்த கானகம்,
வெய்யிலும் உட்புகா ஓர் வனம்,
இருளில் ஓர் நாள் இராமானுசனைக் கோவிந்தன்,
எழில் கச்சிக்கு ஏகிட இறைஞ்சினார்.

44. வேங்கைகள் மலிந்த விந்திய மலைக் காட்டில்,
விட்டுவின் அடியார் அறியா நின்றார் திசை,
வேட்டுவத் தம்பதியாய் விரைந்த பேரருளாளன்,
விட்டகன்றான் கணத்தில் காஞ்சிக் கிணற்றருகே.

45. காசிக்குச் சென்று மீண்ட கருமன குரு,
கனிவாய் அழைத்தான் ராமானுசனை மீண்டும்,
கள்ளமில்லா வெள்ளையுள்ள நம் வள்ளலும்,
கருத்தாய் அவனடிக் கீழ் கற்றார் கல்வி.

## பிரம்ம ராட்சதம்

46. காஞ்சி மன்னன் மகள் கண்கவர் பெண்ணாளைக்,
கடுமையாய்ப் பற்றியது கரியதோர் பூதம்,
பிரபலங்கள் பலர் மந்திரித்தும் மா வேள்வி செய்தும்,
பிரம்ம ராட்சதம் பிடித்த பிடி பெரும் பிடியாயிற்று.

47. 'யாவதாயினும் விரட்டு வேன் யா' னென,
யாதவப் பிரகாசனும் எதிர் வந்து நிற்க,
'ஓடடா மூடனே உடன் அழை ராமானுசனை,
ஓடிடுவேன் உடன் உன் சீடன் நோக்கிடில்' என்றது பேய்.

48. வந்தான் வாதாசனன் வாழ்த்தொலி முழங்க,
வணங்கி நீங்கியது நீசப் பேயுடன்,
வெகுண்ட யாதவன் வெட்கத்தால் குறுகி,
வெளியேற்றினான் சீடரைத் விதியுந்திடவே.

49. கலங்கிய மனத்தராய்க் கருவிலே திருவுடையார்,
காஞ்சி பூரணரைக் கண்டு வணங்கிட,
'களிப்புடன் கிணற்றிலே தீர்த்தம் தினம் சேதித்து,
கஞ்சிவரதன் திருமஞ்சனம் கண்டருள்' என்றாரவர்.

## ஆளவந்தார் வீடு பெற்றார்

50. அரிய திருவைகுந்தம் புகநின்ற ஆளவந்தார்,
'அறிவீர் சாதியில்லை அரங்கன் திருவடியார் மாட்டு,
பத்துப் பாசுரம் செய்த பாணருக்குச் சேவையே,
பழுதிலாப் பேறு பல நல்கும்' என்றார்.

51. 'பிறப்பிறப்புப் பிணைகள் இறுத்தவர் நாம்,
பேராயிரத்தான் தன் பேரின்பச் சேவகர்,
அனந்தனடியொன்றே புகல் என அடைந்தார்க்கு,
ஆனந்தம் ஆனந்தம் பேரானந்தமே' என்றார்.

52. திருமேனி தளர்ந்த தேசுடை ஆசான்,
திருநாடு புகல் திண்ணமெனக் கண்டு,
பெரிய நம்பியைக் காஞ்சிக்குக் கடுகிச் சென்று,
பெரும்பூதூர்ப் பிள்ளையைக் கொணர ஆணையிட்டார்.

53. நாட்கள் நான்கு கழிய நல்லரங்கத்தே,
நல்லரும் முனி ஏற்றார் நலிதரும் நோவு,
நோவினை நீக்கி ரங்கன் நுண்பதம் சேர,
நொடியில் பிரம்ம நாடி நுழைந்து வீடு பெற்றார்.

54. கச்சியில் மகா பூரணரைக் கண்ட எதிராசர்,
கண்களில் நீர் சோரக் காலடி பணிந்தார்.
ஆளவந்தார் ஆணையை ஆங்குடனேற்று,
அவருடன் அரங்கம் நோக்கி அடியளந்தார்.

55. தென்திருக் காவிரிக் கரை திரண்ட மாந்தர்,
தென்னரங்கன் தாளடைந்தார் தமருகக்கும் முனியென,
ஆவி சோர நெக்குருகி ஆராக் கண்ணீருடன்,
ஆளவந்தார் சரமத் திருமேனி ஆங்கு கண்டார்.

56. ''மாமுனி கையில் மடங்கிய முவ்விரல்,
மாசறு முனியின் மட்டிலா ஆசைகள்,
ஆசைகள் மூன்றையும் ஆசான் ஆணையாய்,
அணுவும் குறையின்றி ஆற்றிடுவேன்'' என்றறுதியிட்டார்.

**சபதங்கள்**

57. ''காலமெல்லாம் வைணவத்தேயிருந்து யான்,
காத்திடுவேன் மாந்தரை மாயாயிருளிருந்து,
பஞ்ச சமஸ்காரமும் பண்டை திராவிட வேதமும் தந்து,
பரமன் விட்டு பாதம் பற்றி யுய்விப்பேன்.''

58. ''புவியோரின் நலமே என் புந்தி கொண்டு,
புனிதர்கள் விரிவுரைகள் மனதிற்கொண்டு
விரிவாய் மெய்ஞான தத்துவம் தனை
விசிட்டாத்தைவ பாட்டியமாய் விளக்கிடுவேன்''.

59. ''பார்புகழ் விட்டு புராணமீந்த பராசரர் தன்,
தீதில்லாத் திருநாமம் திக்கெட்டு மொலிக்க
வைத்திடுவேன் அந்நாமம் வைணவனொருவருக்'' கென
வளைந்த முவ்விரல்கள் வரிசையாய் நிமிர்ந்தன.

60. ஆசானுடன் வார்த்தையாடும் அருளிழந்து,
அரங்கனுடன் பிணங்கிய அவர்,
விசனமுற்று விண்ணகரக் கோயில் புகாது,
விரைந்தகன்றார் தம் கச்சியம்பதி வீட்டிற்கு.

**இல்லறத்தில் பிணக்கு**

61. சேஷியின் அடியாரின் சேஷம் உண்ண,
சிறு விருந்து கண்டருள கச்சி நம்பியை அழைத்தார்.
உதவாதிதென்ன அவர் சேஷத்தை உதறினாள் இல்லாள்,
உச்சிஷ்டம் இழந்த உடையவர் உள்ளம் வெதும்பினார்.

**வரதரின் வாக்கு**

62. ''என் மனக் குமுறலை எவரறிவார் இவ்வுலகில்,
இறுக்கமாய் என்னுள் எழுந்துள ஐயங்கள்,
ஐயனே கேட்டருள்வீர் அத்திவரதர் வாக்கை,
அடியேன் விண்ணப்ப'' மென்றார் மென்மன நம்பியால்.

63. மறுதினம் பகன்றார் மாதவக் கச்சி நம்பி,
மாயோன் மாலவன் மலர்வாய் மொழிந்தவை,
மட்டிலா மகிழ்வுற்ற மறையவர் ராமானுசர்,
மதுவுண்ட வண்டெனச் சுழன்றாடினார்.

**64. "வையத்தின் மூலமாய வரதன் யானே பரம்,
வரையில் ஈஸ்வரனும் சீவனும் வேறேயாகும்.
பரமன் பற்றினைப் பற்றிய பரசமர்ப்பணமே முக்தி,
முக்திதான் பிரபன்னனுக்கு முடிவில் எனை மறந்தாலும்,
சரியுமளவில் பிரபன்னனுக்குச் சத்தியமாய்த் திருநாடு,
சாற்றுகின்றேன் 'மகாபூரணர்' சத்தியமாய் உன் ஆசான்."**

**துறவு பூணல்**

65. திருவரங்கத்தே வைணவர் திக்கற்றுப் பதற,
திருவரங்கத்திற் கிளையாழ்வாரைத் திரும்ப ஈர்க்க,
பேரார்வமாய் காஞ்சிக்குக் கடுகிய பெரிய நம்பி,
பெறர்கரு ராமானுசரைக் கண்டார் மதுராந்தகத்தே.

66. 'மின்னலினும் நிலையற்ற யாக்கை இது,
மீண்டும் வரா எனக்கு மகாபூரணர் வரவு,
வேண்டுகிறேன் பஞ்ச சமஸ்கார' மெனப் பூரணரும்,
விரைந்து வைத்தார் இலச்சினையை இளையாழ்வாருக்கு.

67. காஞ்சிக்கு விரைந்தனர் காமுறு சீடரும் குருவும்,
கருத்தொன்றிக் கற்றார் பிரபந்தங்கள் பிற்கால யதி,
குருவும் சீடரும் வைணவக் குழாங்களில் மகிழ,
குடிலில் மனைவிமார் மாறுபட்டுப் பிணங்கினர்.

68. பெரியநம்பியின் தேவி பெரும் துயருற,
பேச்சின்றி யவரகன்றனர் பெருவரங்கத்திற்கு,
அபசாரங்கள் அடுக்கிடும் அழகு மனையாளை எதிராசர்,
அனுப்பினார் தந்திரமாய் அவள் அத்தனகத்திற்கு.

69. பிறந்தகத்திற்கு மனையாள் விரைந்து செல்ல,
பிறப்பிலி வரதனகத்தை யடைந்தார் இராமானுசர்.
எழிலார் தூவராடையும் முக்கோலும் தரித்து,
எத்திக்கும் புகழ் எதிராசனாய் மிளிர்ந்தார்.

**கோவிந்த ஜீயர்**

70. கச்சி அருளாளன் ஆணையைக் கச்சி நம்பி நவில,
கருத்தெளிந்து கர்வம் தொலைத்தெழுந்த யாதவன்,
கோலுடன் துவராடை கொண்டு யதிராசனடியில்,
கோவிந்த ஜீயர் எனக் கொண்டார் திரு நாமம்.

71. குருவே சீடனாகிக் குவலயம் வியந்து போற்ற,
கோவிந்த ஜீயர் கொண்டார் பேரானந்தம்,
யதிராசர் பொன்னடிக் கீழ் ஏத்தி நின்று,
'யதிதர்ம சமுச்சயம்' இயற்றி மகிழ்ந்தார்.

**கோவிந்தன் முதலானோர்**

72. தேசுடை எதிராசன் திருத்திப் பணி கொண்டார்,
மாசடைச் சிவன் பணி கொண்ட கோவிந்தனொடு,
தாசி கண் வயப்பட்ட தனுர் தாசனையும்,
தர்கத்தில் தருக்குற்ற யக்ஞ மூர்த்தியையும்.

## திருக்கோட்டியூர்

73. திரு மந்திரத்தின் தீர்க்கமான உரை,
திருக்கோட்டி நம்பிக்கே தெரிந்தவுரை,
நம்பியைப் பணிந்து நல்லுரை யறிய,
நாடினார் யதிராசர் நல் விரதங்கள் கொண்டு.

74. பக்தர்க ளொருவரும் படித்தறியா வுரையை,
பதினெட்டாம் முறை பாஷ்யகாரர் பெற்றார்.
பக்தியில் பாங்கென உருகிய பக்தர் பல்லோருக்கு,
பாந்தமாய் உடன் திருமந்திரம் தேர்ந்தருளினார்.

75. கோபமுற்றுக் கொதித்தெழுந்தார் கோஷ்டிபூரணர்,
கோஷ்டியாருக்குத் திருமந்திரம் திருவாயலர்ந்தமைக்கு.
'குரு விசனத்தால் கோர சாபம் கொண்டிடினும் யான்,
குவலயத்தாரை உய்வித்தே' னெனக் குதூகலித்தார் எதிராசர்.

## ஸ்ரீபாஷ்யம்

76. 'ஸ்ரீபாஷ்யம்' செவ்வெனவே இயற்றிட,
சிறப்புற்ற '*போதாயன வ்ருத்தி*' அறிய,
கால் நடையாய்க் கூரேசன் பின் தொடரக்,
காஷ்மீர நன் நகர் நண்ணினார் ராமானுசர்.

77. சாத்திரங்களும் வேதநூல்களும் சால மண்டிய,
சாரதா பீட சன்யாசிகள் சபைதனில்,
வாகீசனருளிய வரையில் ஞானத்தால்,
வைணவத்தைச் சிறப்பித்தார் வடதிசை யதிகளிடை.

78. அத்வைதத்திற்கு அந்தகன் அவரே வென அஞ்சி,
ஆங்குள்ள எதிரிகள் அகற்றினர் 'வ்ருத்தியை',
நள்ளிரவில் கூரத்தார் நயமாயதைக் கைப்பற்ற,
நல்லரங்கம் நோக்கி நடை தொடங்கினர்.

79.விழித்தெழுந்த அத்வைதிகள் 'வ்ருத்தியைக்' காணாது,
விரைந்து வந்து பற்றினர் பகவத் ராமானுசரை,
பெறற்கரிய நூலைப் பெற்ற பேரின்பம்,
பேரிழப்பில் முடிந்ததென பெரும் துயருற்றாரவர்.

80. ''ஏங்க வேண்டா என் குருவே எதிராசா,
ஏடுகள் அனைத்தையும் ஏற்றியுள்ளேன் மனத்துள்,
கூறுவேன் முற்றிலும் 'வ்ருத்தியைக்' குறையன்றி'' யெனக்,
கூரத்தார் கூற குதூகலித்தார் குறையற்ற முனி.

81. *இதிகாசமாம் பாகவதம் இணையில் வியாசர் பகல,*
*ஏகதந்தன் அதை ஏற்றில் எழுதினாற் போல்,*
*சீர் பெற்ற ராமானுசர் சிரீபாட்டியம் பகலச்,*
*செம் பட்டோலை பதித்தார் பரமனடியார் கூரத்தார்.*

## கூரத்தாழ்வான்

82. கூரநாட்டு வதிந்த கூரேசரென்பார்,
கொண்டல் மாரியென ஓர் வள்ளலார்,
ஆண்டாள் எனும் அழகு நங்கை அவரில்லாள்,
அவரினும் உயர்ந்த ஓர் ஆன்மீக நல்லாள்.

83. கீறு திங்கள் கொண்டவன்,
சாபம் பண்டு விண்டவன்,
நாமமொன்றே கூறி நின்று,
நாத்தழும்ப ஏத்துவார் தம்,
நலங்கள் காக்க தருமங்கள்,
நாள் முழுக்க நடத்துவார்.

84. 'கோயி'லுக்காய் எதிராசர் 'பெருமாள் கோயி'லகன்றது,
கூரேச தம்பதியைக் கூற்றாய் வாட்டியது,
செல்வங்களைத் துரந்து சிறப்புற்ற தம்பதியர்,
சீரங்க நகரம் சென்று சேவை ஏற்றனர்.

85. திருப்பாவை ஜீயர் திருவருள் பெற்று,
திருவரங்கன் பிரசாதம் திருவயிறு கொண்டவர்க்கு,
பகலவனெனப் பசுங் குழவி இரண்டு பாருதிக்க,
'பராசரன்' 'வியாச' னெனப் பெயரிட்டார் பெரும்புதூரார்.

## தர்சனத்திற்கு தர்சனம் தந்தது

86. காஞ்சியின் வேந்தன் கருமனச் சோழன்,
'காபாலியன்றி உயர் தேவு கண்டிலோ'மென,
ஏட்டினில் ஒப்பமிட்டு இருடீகேசனை விலக்க,
எதிராசரைச் சபைக்கு இட்டிட ஆணையிட்டான்.

87. மூடனைச் சந்திக்க முக்கோலுடையார்க் கரசர்,
முயன்றால் அவரை முடிப்பான் மூர்கனென,
வெள்ளாடையில் குருவை வேறூருக்கனுப்பி,
விரைந்தார் கூரேசர் கச்சிக்குத் துலங்கும் துவராடையில்.

88. 'சிவனுக்கு நிகர் சீரிய தெய்வமில்லை' எனச்,
சிறுமதிச் சோழன் சினந்துரைக்க,
'சிவனிலும் பெரியது' 'த்ரோண' மென செப்பினார்,
சீரங்கன் தாளொன்றிய சீலரவர்.

89. கூரேசர் கூற்றின் கூர் கருத்தறியாது,
கோலவிழிகளையழிக்க ஆணையிட்டா னரசன்,
பரமனைப் பழித்த பாவியைப் பார்தவை,
பாரினில் வேண்டாமெனப் பறித் தெறிந்தார் தாமே.

90. உடனிருந்த பெரிய நம்பியும் ஒளிர் கண் இழக்க,
ஊர் நோக்கி நடத்தினாள் உடனிருந்த அத்துழாய்,
கீழ்மையால் கேசவனடியார் கண் கீறிய சோழன்,
கிருமி கண்டு நைந்து கிடத்தினான் யாக்கையை.

## திருநாராயணபுரம்

91. வனங்களில் திரிந்து வைகுந்தனைப் பாடி ஆடி,
வந்தடைந்தார் வாதாசனர் வளமிகு விட்டலன் நாடு,
விட்டலதேவன் அழகுப் பெட்டகமாம் பெண்ணின்,
வினையைத் தன் விழிக் கருணையால் வீழ்த்தினார்.

92. சமணம் சார்ந்திருந்த சற்குண மன்னன்,
சதுர்புஜ விட்டுவைச் சால வேற்றான்.
விட்டுவைப் பூசித்து வேறு சமயம் விட்டவனை,
'விட்டுவர்தனன்' என விளித்தார் எதிராசர்.

93. மன்னவனும் மருவலர்களும் மாயச் சமணம் விட,
மன்னுபுகழ் எதிராசர் யாதவகிரியடைந்தார்.
துளபங்கள் மண்டிய தூய ஓர் நந்தவனத்திடை,
தொல்லரும் விட்டுவின் தூய படிவம் கண்டார்.

94. குழாங்களை யழைத்துக் கோயிலொன் றெழுப்பி,
விழாக்கள் நடத்தி அவ்விட்டுவை நாட்டினார்.
உள்ளுறைந்த மூலவரின் உற்சவரைத் தேடிட,
உரைத்தான் கனவிலவன் 'உளேன் தில்லி' யிலென்று.

95. மூர்த்தத்தைத் தேடி முகலாய மன்னனை நாடி,
முறையிட்டார் ராமானுசர் மூர்தம் வேண்டி,
செம்பொன் சிலைகளில் செல்வப் பிள்ளையை அழைக்கச்,
செல்வராயன் அவர் கையில் சீராய்ப் படிந்தார்.

**கூரேசர் கண் பெற்றது**

96. யான் பெற்ற பேறு யார் பெறுவாரென,
யதுகிரி யடைந்தார் அடியார் கூரேசர்,
வரதனைச் சேவித்து வாங்கிடு கண்களையென,
வாய்மொழிந்தார் வாதாசன குரு.

97. கச்சி நகரருளாளன் கால் பணிந்தார் கூரேசர்,
கமலநாபன் கனிவாய் 'வேண்டும் வரம் யாதென',
''நான் பெற்ற பேறு நாலூரன் பெற,
நல்வரம் தருவாய் நாதனே' என வேண்டினார்.

98. சீடரின் பெரும் கருணை சிலாகித்த எதிராசர்,
செப்பினார் மீண்டும் சீராய் கண் பெற்றிட,
ஆசானின் ஆணையை அக்கணம் அவரேற்க,
அலரவைத்தான் அவர் கண்களை அத்திவரதன்.

99. யதியரசர் யதுகிரியை விட்டெழுந்தருளி,
இன்னமுதத் திருவரங்க எழில் நகரடைந்தார்,
தன்னரும் மூர்தமொன்றைத் தானணைத்து ஆங்கு,
தந்திட்டார் உலகோர் தம் தாள் ஏற்ற.

100. *தமருகந்த திருமேனி, தானுகந்த திருமேனி,*
*தானான திருமேனி* என மேனி மூன்றாய்,
தந்தளித்தார் பூதூருக்கும், தானுகந்த யதுகிரிக்கும்,
பொன்னரங்கிற்கும் புனிதருட் புனிதராம் எதிராசர்.

**அருளிச் செயல்கள்**

101. 'கத்யங்கள்' மூன்று செய்த கருணாகரன்,
கவினுரு 'சிரீபாட்டியத்' தொடு 'கீதா பாஷ்யமும்',
''வேதாந்த சங்கரமும்' 'நித்ய கிரந்தமும்',
'வேதாந்த தீபிகை' யொடு 'சாரமுமாய்' அருளினார்.

**சரணாகதி கத்யம்**

102. 'சகலமும் துரந்து சரணமாய்த் தனைப் பற்ற,
சூலச் சிறந்த வீடு சத்தியம்' என்றான் கண்ணன்.
நெறிகளில் சிறந்த இந் நேர் வழியை,
நிலை நாட்டினார் நம் நிர்மல ராமானுஜர்.

103. ‘பெற்றவர் மற்றவர் பெரும் சுற்றமொடு,
பெரும் தனங்களும் தவச் செல்வங்களும்,
அருள் தரு ஞான குருவும் அனைத்தும் துறந்தேன்,
அண்டமளந்தான் உன் அடிகளே யடைந்தேன்.’

104. ‘அலர் மகளைப் பிரியா அருளாதியே,
ஆளவிலாக் கருணையே ஆஸ்ரித வத்ஸல,
அகிலத்தின் ஆதாரமே அனைத்தின் ஜீவனே,
அடியேன் பற்றினேன் உன் அரவிந்தத் தாள்களே.’

105. *பகவான் பதில்*
*‘ஒரு சொல் ராமன் யான் சொல் பிழையேன்,*
*ஒருக்காலம் ஒதுக்கேன் உயரடிமை யும்மை,*
*சகலமும் விடுத்து என்னைச் சார்ந்திட்ட யுமக்கு,*
*சத்தியம் சுகவாழ் சாற்றுகிறேன் சத்யகாமன் யான்’*

**திவ்ய ஆணைகள்**

106. ‘அறிவீர் என் ஆணைகள்’ என்ற ஆச்சார்யர்,
அளித்தார் அன்புடன் கட்டளை ஆறு,
‘ஸ்ரீ பாட்டியம் படித்துச் செப்பிடுவீர் மற்றோர்க்கு’,
‘செய்யாவிடில் இசைப்பீர் சீரார்ச் சடகோபன் செயல்கள்.’

107. ‘இயலாது இதுவெனின் இயற்றுவீர் சேவை திருப்பதிகளில்’,
‘இதைவிடுத்தால் வதிவீர் யதுகிரிதன்னில்’,
‘அதுவும் பிழையின் அனுதினம் துதிப்பீர் த்வயமும் குருவும்’,
‘அறுதியாய்க் கொள்மின் அன்பர் வைணவர் சேவை.’

**திருநாடலங்கரித்தல்**

108. ஆண்டுகள் நூற்றிருபது அலங்கரித்துப் புவியில்,
ஆயிரத்து நூற்று முத்தேழில் அலங்கரித்தார் திருநாடு
தன்னொளிர்ச் சோதியான தவச் செல்வர் அகல,
‘*தர்மம் தனித*’ த்த தென தமருலகதிர்ந்தது.

**சமர்ப்பணம்**

அரவணை வில்லிபுத்தூர்ச் சாயி அடி பணிந்து,
அழகர் கோவிந்தகிருட்டிணன் ஆர்வமாய் அளித்த,
எதிராசர் எழிற் காவியம் இன்புற்றிசைப் பார்க்கு,
எக்காலும் வாராது இடர் இது திண்ணமே.

குறிப்புகள்

(பாடல் 36 – 39)

சாந்தோக்ய உபநிடத்தில் 'கப்யாஸம்' எனத் தொடங்கும் மந்திரத்திற்கு ஓர் சீடன் விரிவான உரை கேட்க, யாதவப் பிரகாசர் 'குரங்கின் சிவந்த அபான வழிறை ஒத்த விஷ்ணுவின் கண்கள்' என அர்த்தம் சொன்னார். ராமானுசர் கண்களில் துயரம் வெந்நீராய் ஊற்றியது. ஆசானிடம் ராமானுஜர் சொன்ன அர்த்தம் – 'கம்' என்றால் நீர். நீரினை ஆவியாக்கிப் பருகும் சூரியனுக்கு 'கபி' எனப் பெயர். 'கப்யாஸம்' எனில் 'சூரியனால் விரிக்கப்பட்ட அதாவது தாமரை போன்ற' சிவந்த கண்கள். இதனால் குரு கோபம் கொண்டார்.

பாடல் – 74

ஸ்ரீ ராமானுஜர் திருக்கோட்டியூர் கோபுரமீதேறி 'திருமந்திரம்' பிரகடனம் செய்தார் என்பர். இதை நமது ஆச்சார்யர்கள் ஏற்பது இல்லை. விரும்பிய ஆழ்ந்த பக்தி கொண்டவர்க்கு மட்டும் உரைத்தார் என்பர். ஆகையால் இங்கு கோபுரத்தில் ஏறி உரைத்ததாய் சொல்லவில்லை.

பாடல் – 88 மற்றும் 89

சோழ மன்னன் 'சிவாத் பரதரம் நாஸ்தி' (சிவனில் உயர்ந்த தெய்வமில்லை) என ஒப்பமிடச் சொன்னான். கூரேசர் 'அஸ்தி த்ரோணம் அதப் பரம்' (அதனினும் 'த்ரோணம்' பெரிது) என்றார். 'சிவன்' என்றால் 8 குருணி கொள்ளும் அளவை என்றும் பொருள். 'த்ரோணம்' அதைவிட இரு மடங்கு பெரிய அளவை. சோழன் 'சிவனே' எல்லாவற்றிலும் பெரியது என்க, 'த்ரோணம்' அதனினும் பெரிதென்றார். சொல்லின் விளையாட்டை அறியாச் சோழன் சபையில் இது நடந்தது,

காஞ்சியின் பரமாச்சார்யர் (ஸ்ரீ சந்திர சேகர சரஸ்வதி ) சொல்வார். 'த்ரோணம்' என்றால் தும்பை மலரையும் குறிக்கும். சிவன் தலையில் வைக்கும் தும்பை சிவனிலும் உயர்விலுள்ளது என்று கூரேச மகான் கூறியிருக்கலாம். ஞானிகள் கீழ்த்தரமாக விமர்சித்தார்கள் எனக் கொள்ள வேண்டாம். மூட அரசனும் அவையோரும் புரிந்து கொள்ளவில்லை' என்பார்.

பின்பு சோழன் கிருமி கண்டு இறந்தான். ஆதனால் கிருமி கண்ட சோழனென்பார்கள்.

பாடல் 97, 98

வரதரைப் பாடி கண் பெற்று வர எதிராசர் ஆணையிட, வரதனைப் புகழ்ந்தார் கூரேசர். வரதன் என்ன வரம் வேண்டுமென, 'நான் பெற்ற பேறு நாலூரரான் பெற வேண்டும்' என்றார். நாலூரரான் கூரேசரின் சீடன். பணத்திற்காக சோழமன்னனிடம் சைவம் தழுவி நின்றான். அவன் தான் ராமாநுசர் கையொப்பமிட்டால் வெற்றி பெறலாம் எனத் தூண்டினான். சபைக்கு வந்தது கூரேசரெனக் காட்டியும் கொடுத்தான். கண் இழக்க வைத்தான். இவனும் தான் பெற்ற பேரின்பம் பெற வேண்டினார் கூரேசர். தனக்குக் கண் கேட்கவில்லை.

மறுபடியும் எதிராசர் வலியுறுத்த, வரதனிடம் மீண்டும் வேண்டி தன் கண் பெற்றார். தர்சனத்திற்கு (சித்தாந்தத்திற்காக) தர்சனம் (கண்) தந்தவர் எனப் பேறு பெற்றார்.

Song composed by Thirukkudanthai Aandavan Thiruvadi, A.GOVINDAKRISHNAN, IA & AS (Retd), D 211 Kumara Dhara Block, National Games Village, Koramangala, Bangalore, 560047. Ph: 080-25713209 Cell: 9448353209